


**13.06.2024**

தலைப்புச் செய்திகள்

1. ஜி-7 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று இத்தாலியில் புறப்படுகிறார்.

2. ராணுவ தளவாடங்களின் ஏற்றுமதியை 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கபபட்டுள்ளதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

3. நீட் நுழைவு தேர்வில் ஆயிரத்து 563 மாணாக்கருக்கு வழங்கப்பட்ட கருணை மதிப்பெண்கள் ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

4. நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்க உச்சநீதிமன்றத்தில் வலுவான வாதம் முன்வைக்கப்படும் என்று மாநில சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

5. தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை சிறப்பாக செயல்படுவதாக மாநில அரசு கூறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர் இத்தாலி

பிரதமர் திரு.நரேந்திரமோடி இத்தாலி நாட்டின் அப்பூலியாவில் தொடங்கும் ஜி-7 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இன்று அங்கு புறப்படுகிறார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த உச்சிமாநாட்டில் பிரதமர் நாளை பங்கேற்க உள்ளார்.

காலநிலை மாற்றம், மேம்பாடு, தென்னாடுகளின் முக்கியத்துவம், இந்தியாவின் வளர்ச்சி இலக்குகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து பிரதமர் இதில் உரையாற்றுகிறார்.

செயற்கை நுண்ணறிவு திறன்கள் குறித்தும் அவர் முக்கியமாக விவாதிப்பார் என தெரிகிறது.

இத்தாலி நாட்டின் பிரதமர் ஜியோர்ஜியா மெலினியுடன் எதிர்கால திட்டங்கள் இருதரப்பு ஒத்துழைப்பு முன்னேற்றம் குறித்தும் பிரதமர் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

உலகளாவிய ஒத்துழைப்பில் இந்தியாவின் பங்கு, சர்வதேச பிரச்சனைகளுக்கு சுமூக தீர்வு போன்றவை குறித்து பிரதமர் பிற நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

ஜி-7 உச்சிமாநாட்டில் பிரதமர் பங்கேற்பதன் மூலம் ஜி-20 உச்சிமாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் மற்றும் தென்னாடுகளின் வளர்ச்சி ஆகியவற்றை வலியுறுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

***********

ராஜ்நாத்சிங்

நாட்டில் அடுத்த 5 ஆண்டுகளில் ராணுவ தளவாடங்களின் ஏற்றுமதியை 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கபபட்டுள்ளதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மத்திய பாதுகாப்பு அமைச்சராக இன்று மீண்டும் பொறுப்பேற்றுக்கொண்ட அவர் ஏற்கனவே 21 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் பாதுகாப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்து இந்தியா சாதனை படைத்திருப்பதாக கூறினார்.

வலுவான தற்சார்பு பாரதத்தை உருவாக்க மத்திய அரசு விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் படைவீரர்களின் நலத்திற்கு உயர் முன்னுரிமை வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

***********

அருணாச்சலம்

அருணாச்சல பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராக பிஜேபியின் திரு.பேமா காண்டு இன்று மீண்டும் பதவி ஏற்றுக்கொண்டார்.

இட்டா நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில ஆளுநர் லெப்டினன்ட் ஜென்ரல் கே.டி. பர்னாய்க் அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு.ராஜ்நாத்சிங், திரு.ஜே.பி.நட்டா, திரு.கிரண் ரிஜிஜு உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

***********

உச்சநீதிமன்றம் நீட்

**MBBS., BDS.,** இளநிலை மருத்துவ படிப்பு சேர்க்கைக்கான நீட் நுழைவு தேர்வில் ஆயிரத்து 563 மாணாக்கருக்கு வழங்கப்பட்ட கருணை மதிப்பெண்கள் ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

நீட் நுழைவு தேர்வு வினாத்தாள்கள் கசிந்ததாகவும், முறைகேடுகள் நடைபெற்றதாகவும் தேசிய தேர்வு முகமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீது இன்று விசாரணை மேற்கொண்ட உச்சநீதிமன்றத்திடம் மத்திய அரசு இதனை தெரிவித்துள்ளது.

கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்ட மாணாக்கர் விருப்பப்பட்டால் வரும் 23ஆம் தேதி நடத்தப்படும் மறு தேர்வை எழுத வாய்ப்பளிக்கப்படும் என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

தேசிய தேர்வு முகமை சார்பில் ஆஜரான வழக்கறிஞர், மறு தேர்விற்கான முடிவுகள் வரும் 30ஆம் தேதி அறிவிக்கப்படும் என்பதால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கலந்தாய்வு நடைமுறைகளில் எந்த மாற்றமும் இருக்காது என்று கூறியுள்ளார்.

மருத்துவ படிப்புகளில் சேர்க்கைக்கான கலந்தாய்வு நடைமுறைகளுக்கு தடை விதிக்கப்பட மாட்டாது என்று உச்சநீதிமன்றமும் உறுதிபட தெரிவித்துள்ளது.

***********

தர்மேந்திரபிரதான் நீட்

நீட் தேர்வில் எந்த முறைகேடுகளும் நடைபெறவில்லை என்று மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு.தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் கல்வித்துறை அமைச்சராக இன்று பொறுப்பேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கேள்விதாள்கள் வெளியாகவில்லை என்றும், கூறினார்.

உச்சநீதிமன்றத்தில் தற்போது இந்த பிரச்சனை உள்ளதாகவும், மத்திய அரசு அங்கு பதலளிக்கும் என்றும் கூறினார்.

நீட் பிரச்சனை குறித்து ஆராய கல்வியாளர்கள் குழு ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

***********

ரகுபதி - மா.சுப்பிரமணியன்

இதனிடையே நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்குபெற உச்சநீதிமன்றத்தில் வலுவான வாதம் முன்வைக்கப்படும் என்று மாநில சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வு குளறுபடிகளால் மாணாக்கர் அச்சமடைந்துள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் நேர பற்றாக்குறைக்கு கருணை மதிப்பெண்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று குறிப்பிட்டார்.

***********

தமிழக அரசு

தமிழ்நாட்டில் சிறப்பான திட்டங்களால் கூட்டுறவுத்துறை சிறந்து விளங்குவதாக மாநில அரசு கூறியுள்ளது.

சென்னையில் இன்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் ஆறாயிரம் கோடி ரூபாய் நகைக்கடன் தள்ளுபடி மூலம் 13 லட்சத்து 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக்குழுவின் 2 ஆயிரத்து 756 கோடி ரூபாய் கடன் ரத்து செய்யப்பட்டதாகவும்,

35 ஆயிரத்து 852 கோடி ரூபாய் அளவிற்கு பயிர் கடன்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் 6 ஆயிரத்து 800 கோடி ரூபாய்க்கு மேல் வர்த்தகம் நடந்துள்ளதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

380 கூட்டுறவு மருந்தகங்களில் 20 சதவிகித தள்ளுபடியுடன் 457 கோடி மருந்துகள் விற்பனை செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

***********

செஞ்சிமஸ்தான் குவைத்

குவைத் தீ விபத்தில் தமிழ்நாட்டை சேர்ந்த 5 பேர் உயிரிழந்துள்ளதாக அங்குள்ள தமிழ் சங்கங்கள் தெரிவித்ததாக வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சிமஸ்தான் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலினை இன்று சென்னையில் சந்தித்து ஆலோசனை மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இருப்பினும் உயிரிழந்தவர்கள் குறித்து இந்திய தூதரகம் மூலம் அதிகாரப்பூர்வமான தகவல்கள் வெளியாகவில்லை என்றார்.

பாதிக்கப்பட்ட தமிழர்களின் மருத்துவ செலவை மாநில அரசே ஏற்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

***********

அன்பில் மகேஷ்

தமிழ்நாட்டில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 28 லட்சம் மாணாக்கர் பயனடைந்துள்ளதாக மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கில் ஆயிரம் கல்லூரி மாணாக்கருக்கு கல்வி உதவிதொகையை அமைச்சர் வழங்கினார்.

***********

விக்கிரவாண்டி

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி உட்பட 7 மாநிலங்களில் 13 சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் 10ஆம் தேதி நடைபெறுவதற்கான வேட்பு மனு தாக்கல் நாளை தொடங்குகிறது.

இந்நிலையில் விக்கிரவாண்டி தொகுதியில் பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனையில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 13 லட்சம் ரூபாய் மதிப்பிலான 23 கிலோ வெள்ளி கொலுசுகள் பறிமுதல் செய்யப்பட்டு வருவாய் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

***********

சான்றிதழ் சரிபார்ப்பு

தமிழ்நாட்டில் நடப்பாண்டு **B.E., B.Tech.,** பொறியியல் படிப்புகளில் சேர்வதற்கு விண்ணப்பித்த மாணாக்கரின் சான்றிதழ் சரிபார்ப்பு நாளைமுதல் வரும் 30ஆம் தேதிவரை ஆன்லைன் மூலம் நடைபெற உள்ளது.

தரவரிசை பட்டியல் அடுத்த மாதம் 10ஆம் தேதி வெளியிடப்படும் என தொழில்நுட்ப கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது.

***********

முல்லை பெரியாறு

முல்லை பெரியாறு அணையில் தமிழக கேரள உயர் அதிகாரிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் என 5 பேர் கொண்ட மத்திய கண்காணிப்பு குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

நாகை

நாகை மாவட்டம் வேதாரண்யம் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த 2 இலங்கை மீனவர்கள் மீட்கப்பட்டு கடலோர பாதுகாப்பு குழும போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்பாணம் மாவட்டம் அணலத்தீவு பகுதியை சேர்ந்த இவ்விரு மீனவர்களின் படகு பழுதாகியதை அடுத்து 2 நாட்களாக கடலில் தத்தளித்து வந்த நிலையில் ஆற்காட்டுத்துறை மீனவர்கள் அவர்களை மீட்டு கரைக்கு கொண்டுவந்தனர்.

வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் இம்மீனவர்களுக்கு தேவையான முதலுதவிகள் வழங்கப்பட்ட பின்னர் கடலோர பாதுகாப்பு குழும போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

***********

மீன்பிடி தடைக்காலம்

தமிழ்நாட்டின் கிழக்கு கடற்கரை பகுதியில் மீன்பிடி தடைக்காலம் நாளை நள்ளிரவுடன் முடிவடைவதை ஒட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் மீன்பிடி தளம் தற்போது களைகட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

தென்காசி

பக்ரீத் பண்டிகையை ஒட்டி தென்காசி மாவட்டம் பாவூர் சத்திரம் ஆட்டுச்சந்தையில் 3 கோடி ரூபாய்க்கு ஆடுகள் விற்பனையானதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

இருவரி

தூத்துக்குடி மாவட்டத்தில் பொதுவிநியோக திட்ட சிறப்பு முகாம் நாளை மறுநாள் அந்தந்த வட்டாச்சியர் அலுவலகங்களில் நடைபெறும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜி.லட்சுமிபதி தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மண்டபம் அருகே இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கிவைக்கப்பட்டிருந்த 2 டன் எடை கொண்ட சமையல் இஞ்சியை பறிமுதல் செய்து சுங்கத்துறை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

***********

பேட்மிட்டன்

சிட்னியில் நடைபெறும் ஆஸ்திரேலியன் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சமீர் வர்மா சிங்கப்பூரின் **Loh**-வை இன்று எதிர்கொள்கிறார்.

**H.S.** பிரணாய் - இஸ்ரேலின் **Zilberman**–யை தற்போது எதிர்கொண்டுள்ளார்.

மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் ஆகர்ஷி கஷ்யப் முன்னேறியுள்ளார்.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது